**செ. கு. எண்: 104** **நாள்: 30.06.2018**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 30.6.2018

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், அகரக்கோட்டாலம் கிராமத்தைச் சேர்ந்த (லேட்) திரு. ராமகிருஷ்ணன் என்பவரின் மகன் செல்வன் புவனேஸ்வரன் மற்றும் திரு. மணிகண்டன் என்பவரின் மகன் செல்வன் ரஞ்சித் ஆகியோர் மணிமுக்தா அணை நீர்த்தேக்கத்தில் மீன் பிடிக்க சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்தார்கள் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், நல்லரசன்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலசுப்ரமணியன் என்பவரின் மகன் செல்வன் சந்துரு என்கிற சந்திரவேலன் மற்றும் திரு. ராஜாராமன் என்பவரின் மகன் செல்வன் பிரேம்குமார் ஆகியோர் நீரில் விளையாட சென்றபோது மூழ்கி உயிரிழந்தார்கள் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், கிண்டி வட்டம், நந்தனம் குடியிருப்பில் வசித்து வந்த திரு. மாரி என்பவரின் மனைவி திருமதி. கிருஷ்ணம்மாள் என்பவர் பால்கனி இடிந்து விழுந்த விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், எம்.புதுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. உதயன் என்பவரின் மகன் திரு. சுரேஷ் மற்றும் அதே கிராமத்தைச் சேர்ந்த திரு. ராசு (லேட்) என்பவரின் மகன் திரு. பிரபு ஆகியோர் வைகை ஆற்றின் நிலையூர் தடுப்பணையில் குளிக்கச் சென்றபோது ஆற்றில் மூழ்கி உயிரிழந்தார்கள் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கோட்டைமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. செந்தில்குமார் என்பவரின் மகன் செல்வன் மார்நாடு என்பவர் வீட்டின் அருகிலுள்ள தெப்பகுளத்தில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், மருதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கண்ணப்பன் என்பவரின் மனைவி திருமதி. ரங்குத்தாய் என்பவர் மாடு மேய்த்துக்கொண்டிருந்தபோது இடி தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், மூடுதுறை கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனிசாமி என்பவரின் மகன் திரு. கிருத்திக்குமார் என்பவர் கல்குழியில் துணி துவைத்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளைம் வட்டம், காளம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. (லேட்) உதயகுமாரின் மனைவி திருமதி. மீனாட்சி மற்றும் அதே கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னராஜ் என்பவரின் மகள் செல்வி அனிதா ஆகியோர் மண் சரிவினால் உயிரிழந்தார்கள் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஜம்பை கிராமத்தைச் சேர்ந்த திரு. குப்புசாமி என்பவரின் மகன் திரு. மயில்சாமி மற்றும் அதே கிராமத்தைச் சேர்ந்த திரு. எஸ்.ஆர். பொன்னுசாமி ஆகியோர் மலைத்தேனீக்கள் தாக்கியதில் உயிரிழந்தார்கள் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், தொட்டிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சாமிநாதன் என்பவரின் மகன் திரு. கண்ணன் என்பவர் வாய்க்காலில் இறங்கும் போது மழை நீரால் அடித்துசெல்லப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த **15** நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இச்சம்பவங்களில் உயிரிழந்த **15** நபர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**